பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; 'பா.ஜ.க.வின் பிராஞ்ச்தான் த.வெ.க.' என்பதுபோல ஜோசப் விஜய் பேசியிருக்கிறாரே கேட்டியா?

பட்டணம் : **ஆமாமய்யா; பேசும்போதே கேட்டேன். இப்பதான் புரியுது. பா.ஜ.க.ன்னு சொன்னாலே, த.வெ.க. பம்மி பதுங்குவது ஏன்னு? இதைத்தான் பெரியார் அய்யா, சொல்லுவார், 'பூனைக்குட்டி வெளியே வந்து விட்டதுன்னு'.!**

நடப்பாண்டில் தென்மேற்கு பருவமழை குறைவு!

இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்!

புதுடெல்லி, அக். 2 - நடப்பாண்டு ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரை பெய்த, தென் மேற்கு பருவமழை இயல்பை விட 13 சதவீ தம் குறைவாக பெய்துள் ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது.

இது குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக் கையில்,

இந்தாண்டு ஜூன் மாதம் முதல் செப்டம் பர் வரையிலான காலத் தில் நாட்டில் பெய்த தென்மேற்குப் பருவம ழையில், இந்தியா தனது நீண்ட கால சராசரி மழையளவில் 87.4 சதவீ தத்தைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது 2001 ம் ஆண்டுக் குப் பிறகு பதிவான நான் காவது மிகக் குறைந்த பருவமழை என்றும் குறிப் பிடப்பட்டுள்ளது.

இயல்பான பருவக் கால சராசரியான 868.6 மில்லி மீட்டர் மழைக்கு பதிலாக, நாட்டில் 759.4 மில்லி மீட்டர் மழை மட் டுமே பெய்துள்ளதாக வும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனால், ஜூன் 1 முதல் செப்டம்பர் 30 வரையிலான காலகட் டத்தில் சுமார் 13 சதவீத மழை பற்றாக்குறை ஏற் பட்டுள்ளதாகவும், பருவ மழையின் இறுதியில் கன மழை பெய்தபோதிலும்,

பல பிராந்தியங்களில் குறிப்பிடத்தக்க மழைப் பற்றாக்குறை பதிவான தால், நாட்டின் பல்வேறு பகுதிகளில் மழைப்பொ ழிவு சீரற்ற முறையில் இருந்தாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

சிவ சிவா!

முரட்டு பக்தர் சேகர்பாபு அறநிலையத்துறை அமைச்சராக இருந்தபோது ஆலயச் சொத்துக்களை பாதுகாத்தார் முருகன் மாநாடு வள்ளலார் மாநாடு என மாநாடுகள் கூட்டினார்.

குடமுழுக்கு வைபவங்களை மிகச் சிறப்பாக நடத்தினார்

ஆனால்

முறுக்கு பக்தர் ரமேஷின் நிர்வாகத்திலோ ஆங்காங்கே ஆலயச் சொத்துக்களை ஆட்டயப் போடுவது அன்றாடக் கதையாகி வருகிறது.

மேலும்...

குடமுழுக்கு நிகழ்ச்சிகளில் பிளாக் டிக்கெட் விற்பது பைப்படி தண்ணீரை பிடித்து பக்தர்கள் தலையில் தெளிப்பது

செருப்பு காலோடு கோபுரம் ஏறுவது என



கோவில்களை கொண்டு போய் கோலி விளையாடும் பையனிடம் கொடுத்த கதையாகி வருகிறது..

என்னநாஞ் சொல்றது



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

விஜய் ஆட்சிக்கு வந்ததினுடைய மாற்றம் தமிழ்நாட்டுக்கு துர்நாற்றம்!

மதுராந்தகத்தில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் சாடல்!

அச்சிறுப்பாக்கம், அக். 2 - மதுராந்தகம் சட்ட மன்றத் தொகுதி இடைத் தேர்தலில் தி.மு.க. கழகத் தின் சார்பில் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் போட்டியிடுகிறார்.

மதுராந்தகம் சட்டமன் றத் தொகுதி இடைத்தேர்த லில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர்பரந்தாமன் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்தில்உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்து வருகிறார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலை மையில் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய செயலா ளர் தம்பு முன்னிலையில் கழக வேட்பாளர் பரந்தா மன் மொறப்பாக்கம், தண் டலம், கழனிப்பாக்கம், கூடலூர், மாத்தூர்ஆகிய கிராமங்களில் உதயசூரி யன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார்.வாக்கு சேகரிக்க வந்த வேட்பா ளர் பரந்தாமனுக்கு கிராம மக்கள் மலர் தூவி ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அப்போது வாக்காளர்க ளிடத்தில்வாக்கு சேகரித்து பேசிய வேட்பாளர் பரந் தாமன் :

உதய சூரியன் சின்னத் தில் ஓட்டு கேட்டு வந்துள் ளேன் திமுக தலைவர் மு. க. ஸ்டாலின், எதிர்க்கட் சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் வேட்பாளராக நான் உங்க ளிடத்தில் வந்துள்ளேன் நீங்கள் அனைவரும் உதய சூரியன் சின்னத்தில் வாக்க ளித்து பெருவாரியான வாக்குகள் வித்தியா சத்தில் என்னை வெற்றி பெற செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்ட வேட் பாளர் பரந்தாமன்

ஒரு மாற்றம் வேண்டி ஆட்சிக்கு வந்து எனக்கு ஒரு வாய்ப்பு தாருங்கள் நான் நாட்டை மாற்றி முன்னேற்றி காட்டுகிறேன் என ஓட்டு கேட்டார் அவர் பஸ் மீது ஏறி நின்று பிரச்சாரம் செய்து பாட்டு பாடி டான்ஸ் ஆடி ஓட்டு கேட்டார் ஆட்சிக்கு வந் தால் மகளிர்க்கு மாதம் 2500 ரூபாயும், ஆறு சிலிண் டர் கொடுப்பதாகவும் படித்த இளைஞர்களுக்கு மாதம் 4000 ரூபாய் கொடுப்பேன் என்று சொன்னார் கொடுத்தாரா என கேள்வி எழுப்பிய வேட்பாளர் பரந்தாமன் ஆட்சிக்கு வந்து ஐந்து மாதம் ஆகிவிட்டது இன் னும் அவருக்கு அந்த நிமி டம் கிடைக்கவில்லை தேடிக் கொண்டிருக்கிறார். ஆனால் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் ஆட்சி யில் மகளிர் உரிமைத் தொகை மாதாமாதம் கரெக்டாக வந்தது. முதி யோர் உதவித்தொகை 100 நாள் வேலை திட்டத்தின் பணி செய்யும் பணியாளர் களுக்குபணம் கரெக்டாக வந்தது .இப்ப வருதா என் றாள் வரவில்லை.இதை யெல்லாம் சட்டமன்றத் தில் பேசுவதற்கு என்னை மதுராந்தகம்சட்டமன்ற தொகுதி உறுப்பினராக தேர்வு செய்வதற்குவாக்கா ளர்கள் ஆகிய நீங்கள் உதய சூரியன் சின்னத்தில் வாக்க ளித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெற செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்ட அவர்

விஜய் ஆட்சிக்கு வந்த தன்னுடைய மாற்றம் தமிழ்நாட்டுக்கு ஏற்பட் டுள்ள துர்நாற்றம் என சாடினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ்ச் செல்வன், மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, ஒன்றிய செயலாளர்கள் ராஜாராம், மணிமாறன் . மொடையூர் துரை, வல் லம் ஒன்றிய பெருந்தலை வர் அமுதா ரவிக்குமார், பொதுக்குழு உறுப்பினர் கள் சாந்தி ஏழுமலை, வீடூர் ரவி,விழுப்புரம் வடக்குமா வட்ட கலை இலக்கிய அணி அமைப்பாளர் செந் தில் குமார், மாவட்ட மக ளிர் அணி அமைப்பாளர் திலகவதி விஜயகுமார், ஒன் றிய கவுன்சிலர் மாத்தூர் சிலம்பரசன், ஊராட்சி நிர் வாகிகள் மாத்தூர் ரவி, ராஜா, ராஜேந்திரன், பாஸ் கர், கதிரவன், கிருஷ்ண மூர்த்தி, சிதம்பரம், மனோஜ், ஜெகன், நாகப் பன், மோகன், ஒன்றிய நிர் வாகிகள்மயிலம் வடக்கு ஒன்றியம் கிஷோர், சம்சு தீன்,தீவனூர் சேகர், ரமேஷ் பிரபு, ரவி, வேலு, ஐயம்பெ ருமாள், காந்தி, அர்ஜூ னன், உதய வாசன், மயிலம் தெற்குசசிகுமார், செல்வம், அகில்,ஓலக்கூர்மேற்கு ஒன் றிய நிர்வாகிகள் அமராவதி, திருஞான சம்பந்தம், சந்திர பாபு, முனுசாமி, ஹேமசந் திரன்உள்ளிட்ட நிர்வாகி கள் கலந்து கொண்டனர்.

மதுராந்தகத்தில் ராஜகண்ணப்பன் வாக்குச் சேகரித்தார்!

மதுராந்தகம், அக். 2 – மதுராந்தகம் சட்டமன்ற இடைத் தேர்தலில் போட்டி யிடும் தி.மு.க. வெற்றி வேட் பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இரா. இராஜேந்திரன், கழகத் தேர்தல் பணிக்குழுத் தலைவர் முன்னாள் அமைச்சர் ஆர்.எஸ். இராஜகண்ணப் பன், சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ. எம்.வி. பிரபாகரராஜா ஆகியோர் சேலம் மத்திய மாவட்ட கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் கள்ளபிரான்புரம் ஊராட்சி, 73வது வாக்குச்சாவடிக்குட்பட்ட வள் ளுவபாக்கம் பகுதியில் பொதுமக் களை நேரில் சந்தித்து, திராவிட மாடல் ஆட்சியில் நிறைவே ற்றபட்ட திட்டங்கள் சாதனங்களை விளக்கி யும், தற்போது நடைபெற்று வரும் மக் கள் விரோத போலி விளம்பர ஆட்சி யில் விஷம்போல் ஏறியுள்ள விலை வாசி உயர்வு, கேட்டவுடன் ஷாக் அடிக்கும் மின்சார கட்டண உயர்வு, பெண்கள் குழந்தைகளுக்கு பாதுகாப் பில்லாத சூழ்நிலை, பெருகிவரும் போதைப்பொருள் புழக்கம்,

அதனால் ஏற்படும் கொலை கொள்ளை சட்டம் ஒழுங்கு சீர்கேடு, தொடர்ந்து ஏற்படும் மின்வெட்டு என நாள்தோறும் பொதுமக்கள் சந்தித்து வருகிற இன்னல்களை எடுத்து கூறி யும், கழக வேட்பாளர் வெற்றி பெற வேண்டியதன் அவசியத்தையும் விளக்கியும் உதயசூரியன் சின்னத் திற்கு வாக்குகளை சேகரித்தனர்.

கோலார் தங்க வயல் தி.மு.க. சார்பில் கழக முப்பெரும் விழா!

இராமசாமி - போர்முரசு கதிரவன் - திருமதி மலர்வேணி பங்கேற்பு!

கோலார், அக். 2 - கோலார் தங்க வயல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், கழக முப்பெரும் விழா ஹென் றீஸ் பகுதியில் 04.10.2026 - ஞாயிற்றுக்கிழமை , காலை 10:30 மணியள வில், கோலார் தங்க வய லில் நடைபெற உள்ளது.

பொதுச்செயலாளர், கர்நாடக மாநில தொ. மு.ச., மேனாள் மாநில அமைப்பாளர் - தற்போ தைய பொறுப்புக் குழு உறுப்பினர் இராமசாமி.

செயலாளர், கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி 'போர் முரசு' கதிர வன்.

செயலாளர், கர்நாடக மாநில தொ.மு.ச. மகளிர் அணி திருமதி மலர் வேணி.

கழகத் தோழர்கள் அரு ணாசலம், சாரங்கபாணி, முனிரத்தினம், வழக்கறி ஞர் மணிவண்ணன், தொ.மு.ச. தலைவர் சிவா, செயலாளர் கன்னையன், நித்தியானந்தன், நாராய ணமூர்த்தி, ரவீந்திரன் சௌந்தர்ராஜன், ஆர்மி செல்வராஜ், ஜெயசூரி யன் மற்றும் கழகத்தின் முன்னணிப் பொறுப்பா ளர்கள் பங்கேற்கிறார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடு ஹென்றீஸ் கிளைக் கழ கம்.

நிகழ்ச்சி சிறப்புகள்:

கழகத்தின் மூத்த முன் னோடிகளுக்குப் பொன்னாடை போர்த் திச் சிறப்பித்தல்.

கழகத் தலைவர், தமிழ் நாடு முன்னாள் முதல மைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் 1984 ஆம் ஆண்டு கழகக் கொடி யேற்றி வைக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க கொடிக்கம்பத்தைப் புதுப்பிக்க அரும்பாடு பட்ட உடன்பிறப்புக ளுக்கு பாராட்டும் பொன் னாடை போர்த்துதல்.

ஹென்றீஸ் பகுதியைச் சேர்ந்த 15 ஆட்டோ ஓட் டுநர் தோழர்களுக்கு இல வசச் சீருடை வழங்கும் நலத்திட்ட உதவிகள்.

மாணவ, மாணவிய ருக்கு இனிப்பு வழங்கு தல், இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வீரபாண்டி ஆ. இராஜா
அக்டோபர் 2 (2021)



தனது இளமைப் பருவத்திலேயே தனது தந்தையாகிய வீரபாண்டியாரின் வழியில் கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்டச் செயலாளர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்தையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "சேலம் மண்டலத்தில் கழகம் வளர்க்கும் வீரனாக வலம் வந்த தம்பி வீரபாண்டி ராஜா" என்று தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

